## Group 2 2A Syllabus Topic Wise Revision Test

## Development Administration in Tamil Nadu Revision Test Part 2 in Tamil

**Portion: அலகு – IX: தமிழகத்தில் வளர்ச்சி நிர்வாகம்: அரசியல் கட்சிகளும் பலதரப்பு மக்களுக்கான நலத்திட்டங்களும் - இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கான நியாயங்களும் சமூக வளங்களைப் பெறும் வாய்ப்புகளும் - தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியில் சமூகநலத் திட்டங்களின் தாக்கமும் பங்களிப்பும்.**

1) ஒரு கட்சி அங்கீகரிக்கப்பட அதன் வேட்பாளர் குறைந்தபட்சம் எத்தனை சதவீதம் ஓட்டுகளை பெற்றிருக்க வேண்டும்?

A. 2%
B. 4%
C. 6%
D. 8%

விளக்கம்: C) 6%

6 சதவீத ஓட்டுகளை ஒரு கட்சியின் வேட்பாளர் இறுதியாக நடந்த பொதுத் தேர்தலில் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அக்கட்சி ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக உருவெடுக்கும். மேலும் அக்கட்சி 5 ஆண்டுகளாக அரசியல் செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

2) கீழ்கண்டவற்றுள் ஒரு கட்சி ஆட்சிமுறையை வகையை சாராத நாடு எது?

A. சீனா
B. வடகொரியா
C. கியூபா
D. அமெரிக்கா

விளக்கம்: D) அமெரிக்கா

இம்முறையில் ஒரே அரசியல் கட்சி மட்டும் அரசாங்கத்தை ஏற்படுத்தும் உரிமையை கொண்டிருக்கும். நாட்டில் உள்ள மற்ற கட்சிகள் அரசாங்கத்தில் எந்த ஒரு தலையீடும் ஏற்படுத்த முடியாது.

3) பிரிட்டன் எந்த கட்சி ஆட்சி முறையை கொண்டுள்ளது?

A. ஒரு கட்சி முறை
B. இரு கட்சி முறை
C. பல கட்சி முறை
D. எதுவுமில்லை

விளக்கம்: B) இரு கட்சி முறை

இம்முறையில் இரண்டு கட்சிகள் அதிகாரத்தை பங்கு கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும். ஒன்று ஆளும் கட்சியாகவும் மற்றொன்று எதிர்க்கட்சியாகவும் செயல்படும். பிரிட்டனில் தொழிலாளர் கட்சி மற்றும் பழமைவாத கட்சி ஆகிய இரு கட்சிகள் உள்ளன.

4) இந்தியாவில் தேசிய கட்சியாக அங்கீகரிக்கப்பட ஒரு கட்சி இறுதியாக நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் குறைந்த பட்சம் ____ மாநிலங்களில் ____% தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.

A. 3, 2
B. 2, 3
C. 4, 3
D. 3, 4

விளக்கம்: A) 3, 2

அல்லது 1 மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் நான்கு மக்களவைத் தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். மக்களவைத் தேர்தலில் அல்லது நான்கு மாநிலங்களுக்கான சட்டமன்ற தேர்தலில் செல்லத்தக்க மொத்த வாக்குகளில் ஒரு கட்சி 6% வாக்குகளை பெற்று இருக்க வேண்டும்.

5) ஒரு கட்சி எத்தனை தொகுதி களுக்கு ஒரு மக்களவைத் தொகுதியில் வெற்றி பெற்றால் மாநில கட்சியாக அங்கீகரிக்கப்படும்?

A. 1
B. 2
C. 3
D. 4

விளக்கம்: A. 1

அல்லது சட்டப்பேரவைத் தேர்தலில் குறைந்தபட்சம் இரண்டு தொகுதிகளில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும்.

6) தேர்தல் சின்னங்கள் ஆணை பிறப்பிக்கப்பட்ட ஆண்டு எது?

A. 1962
B. 1965
C. 1968
D. 1972

விளக்கம்: C. 1968

இவ்ஆணையின்படி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு மட்டுமான ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்சிகளுக்கு ஒதுக்கப்படாத சின்னங்கள் என இரண்டு வகை உள்ளது.

7) ஒரு அரசியல் கட்சி தோற்றுவிக்க குறைந்தபட்சம் எத்தனை உறுப்பினர்கள் கொண்டிருத்தல் வேண்டும்?

A. 100
B. 500
C. 1000
D. 5000

விளக்கம்: A. 100

அவர்கள் ஒவ்வொருவரும் வாக்காளர் அடையாள அட்டையை கொண்டிருத்தல் வேண்டும். மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்து கட்சி அமைப்பு குறித்த ஆவணங்களை கொண்டிருக்க வேண்டும்.

8) இந்திய அரசியலமைப்பின் எந்த பகுதியில் நாட்டின் தேர்தல் விதிமுறை இடம் பெற்றுள்ளது?

A. XI
B. XII
C. XIV
D. XV

விளக்கம்: D. XV

இப்பகுதியின் சரத்து 324 முதல் 329 வரையிலான பிரிவுகளில் கூறப்பட்டுள்ள விதிமுறைக்கு இப்ப நம் நாட்டின் தேர்தல் முறை அமைக்கப்பட்டுள்ளது.

9) தன்னிச்சையான தேர்தல் ஆணையம் அமைத்திட இந்திய அரசியலமைப்பின் எந்த பிரிவு வழிவகை செய்கிறது?

A. 324
B. 326
C. 327
D. 328

விளக்கம்: A. 324

தற்போது தேர்தல் ஆணையமானது ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்களை உள்ளடக்கியுள்ளது.

10) தமிழ்நாட்டில் யாருடைய காலத்தில் குடவோலை என்னும் வாக்களிக்கும் முறை வழக்கத்தில் இருந்தது?

A. பல்லவர்கள்
B. சேரர்கள்
C. சோழர்கள்
D. பாண்டியர்கள்

விளக்கம்: C. சோழர்கள்

இந்தியாவில் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 25ஆம் நாளை தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடுகிறோம்.

11) VVPAT முதல் முதலில் எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?

A. 2011
B. 2013
C. 2014

D. 2017

விளக்கம்: C. 2014

ஒருவர் தாம் செலுத்திய வாக்கு சரியானபடி பதிவாகி உள்ளதா என்று தெரிந்து கொள்ளும் வாய்ப்பை 2014ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேர்தல் ஆணையம் அறிமுகப்படுத்தியது. இதன் விரிவாக்கம் Voter Verifiable Paper Audit Trail.

12) NOTA வை அறிமுகப்படுத்திய எத்தனையாவது நாடாக இந்தியா உள்ளது?

A. 10
B. 14
C. 18
D. 8

விளக்கம்: B. 14

நோட்டா முதன்முதலில் 2014 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டது. NOTA – None Of The Above

13) கீழ்கண்டவற்றுள் மறைமுக தேர்தல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர் யார்?

A. நாடாளுமன்ற உறுப்பினர்

B. சட்ட பேரவை உறுப்பினர்

C. ஊராட்சி மன்ற தலைவர்

D. குடியரசு தலைவர்

விளக்கம்: D. குடியரசு தலைவர்

18 வயது நிரம்பிய மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவது நேரடி தேர்தல் முறை என்று அழைக்கப்படுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் வாக்களித்து தேர்வு செய்யும் முறை மறைமுக தேர்தல் முறை என்று அழைக்கப்படுகிறது.

14) இந்திய குடியரசு தலைவர் தேர்வு முறையில் பங்கு பெறுபவர்கள் யார் யார்?

1) பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

2) இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்

A. 1
B. 2
C. 1 & 2
D. எதுவும் இல்லை

விளக்கம்: C) 1 & 2

பாராளுமன்ற இரு அவைகளிலும் மற்றும் மாநில சட்டமன்றங்களில் நியமிக்கப்படும் நியமன உறுப்பினர்கள் குடியரசுத் தலைவர் தேர்தலில் பங்கு பெற மாட்டார்கள்.

15) இத்தாலி நாடு எந்த கட்சி ஆட்சி முறையை கொண்டு செயல்படுகிறது?

A. ஒரு கட்சி முறை

B. இரு கட்சி முறை

C. பல கட்சி முறை

D. எதுவும் இல்லை

விளக்கம்: C) பல கட்சி முறை

மேலும் இந்தியா, இலங்கை, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் பல கட்சி ஆட்சி முறையை கொண்டு செயல்படுகின்றன.

16) 2017 ஆம் ஆண்டு நிலவரப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள தேசிய கட்சிகளின் எண்ணிக்கை _____.

A. 5
B. 7
C. 8
D. 11

விளக்கம்: B. 7

ஒரு கட்சி குறைந்தது நான்கு மாநிலங்களில் ஆவது மாநில கட்சி என்ற தகுதியைப் பெற்றிருக்குமானால் அது தேசிய கட்சி என்ற தகுதியை பெற்று அதற்கென தனி சின்னத்தை பெறுகிறது. அக் கட்சியின் அதிகாரப்பூர்வ வேட்பாளர் மட்டுமே சின்னத்தை உபயோகிக்க முடியும்.

17) கீழ்க்கண்டவற்றுள் எதிர்க்கட்சி தலைவர் பற்றி கூற்றுகளில் சரியானது எது?

1) இவர் கேபினட் அமைச்சர் தகுதி பெறுகிறார்.

2) பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக செயல்படுகிறார்

3) மத்திய கண்காணிப்பு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர் தேர்ந்தெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறார்.

A. 1 & 2
B. 2 & 3
C. 1 & 3
D. அனைத்தும்

விளக்கம்: D) அனைத்தும்

மேலும் மக்களாட்சி முறையிலான அனைத்து அரசாங்கங்களும் எதிர்க்கட்சித் தலைவர் முக்கிய பங்கை வகிக்கிறார்.

18) அழுத்த குழுக்கள் என்ற சொல் _____ நாட்டில் உருவாக்கப்பட்டது?

A. ஐக்கிய அமெரிக்க நாடு

B. ரஷ்யா

C. கனடா

D. இங்கிலாந்து

விளக்கம்: A. ஐக்கிய அமெரிக்க நாடு

இவை நல குழுக்கள் அல்லது தனிப்பட்ட நலகுழுக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. அதேசமயம் இவை அரசியல் கட்சியில் இருந்து வேறுபட்டவை. அடுத்த குழுக்கள் தேர்தல்களில் போட்டியிடுவதில்லை.

19) காமராஜரின் அமைச்சரவையில் தொழில்துறை அமைச்சராக விளங்கியவர் யார்?

A. வெங்கடாசலம்

B. வெங்கட்ராமன்

C. ராமையா

D. பக்தவச்சலம்

விளக்கம்: B. வெங்கட்ராமன்

முன்னாள் குடியரசுத் தலைவரான R. வெங்கட்ராமன் அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து தொழில் துறையில் இந்தியாவிலேயே முன்மாதிரியான மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்தினார்.

20) எந்த ஆண்டு சேலம் உருக்காலை ஏற்படுத்தப்பட்டது?

A. 1972

B. 1974

C. 1977

D. 1979

விளக்கம்: C. 1977

இது தமிழகத்தில் மத்திய அரசால் அமைக்கப்பட்ட புகழ் பெற்ற தொழில் நிறுவனங்களில் ஒன்றாகும்.

21) பொருத்துக.

a) இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் – 1) திருச்சி

b) பாரத் கனரக மின்னணு தொழிற்சாலை – 2) உதகமண்டலம்

c) ரயில் பெட்டி தொழிற்சாலை – 3) சென்னை

d) இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் – 4) பெரம்பூர்

A. 4 1 2 3

B. 3 2 1 4

C. 1 4 3 2

D. 2 1 4 3

விளக்கம்: D. 2 1 4 3

இந்துஸ்தான் போட்டோ பிலிம், பாரத் கனரக மின்னணு தொழிற்சாலை மற்றும் இந்துஸ்தான் டெலி பிரிண்டர்ஸ் ஆகியவை 1960 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மேலும் ரயில் பெட்டி தொழிற்சாலை பெரம்பூரில் 1955 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

22) தமிழ்நாடு மின்சார வாரியம் அமைக்கப்பட்ட ஆண்டு?

A. 1948
B. 1950
C. 1953
D. 1957

விளக்கம்: D. 1957

1948 ஆம் ஆண்டு மின்பகிர்மான சட்டத்தின்படி தமிழகத்தில் 1957 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாள் தமிழ்நாடு மின்சார வாரியம் அமைக்கப்பட்டது. ஐந்தாண்டு திட்டக்காலத்தில் தமிழகத்தில் மின்சார உற்பத்தியை பெருக்குவதற்காக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

23) கீழ்க்கண்டவற்றுள் தவறாக பொருந்தியுள்ளதை தேர்ந்தெடு.

1) குந்தா – நீர்மின்சக்தி

2) எண்ணூர் - அணுமின் சக்தி

3) பைகாரா – அனல்மின் சக்தி

4) கல்பாக்கம் – அணுமின் சக்தி

A. 1 & 2
B. 2 & 3
C. 3 & 4
D. 2 & 4

விளக்கம்: B. 2 & 3

எண்ணூரில் அனல் மின் நிலையமும், பைகாராவில் நீர்மின் நிலையமும், நெய்வேலியில் அனல் மின் நிலையமும், பாபநாசத்தில் நீர்மின் நிலையமும், மேட்டூரில் நீர்மின் நிலையமும் தமிழ்நாட்டில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் ஆகும்.

24) மாநில வர்த்தக நிறுவனம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?

A. 1836
B. 1966
C. 1956
D. 1926

விளக்கம்: C. 1956

தமிழக அரசு 1836 ஆம் ஆண்டு சென்னை வர்த்தக சபையை அமைத்தது. அதுவே 1966 இல் சென்னை வர்த்தக தொழில் சபையாக மாறியது.

25) கீழ்கண்டவற்றுள் தேர்தல் சின்னமாக பயன்படுத்த முடியாதது எது?

A. சிங்கம்

B. யானை

C. சிறுத்தை

D. தாமரை

விளக்கம்: C. சிறுத்தை

சிங்கம் மற்றும் யானையை தவிர பிற விலங்குகளை தேர்தல் சின்னமாக உபயோகப்படுத்துவதை தேர்தல் ஆணையம் தடை செய்துள்ளது.

26) மக்களாட்சி என்பது நேரடியாக எதை சார்ந்து உள்ளது?

A. அரசியலமைப்பு

B. நீதித்துறை

C. மக்கள்

D. அரசாங்கம்

விளக்கம்: C. மக்கள்

மக்களாட்சி தனது அதிகாரத்தை நேரடியாக மக்களிடம் இருந்து பெறுகிறது. பொதுக்கருத்து என்பது ஒரு தனி மனிதக் கருத்து அல்ல. பொதுக்கருத்து என்பது ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு பிரிவு அல்லது பல பிரிவு மக்களின் கருத்து ஆகும்.

27) எந்தக் கட்சி ஆட்சி முறையில் குறைவான பங்களிப்பும், பொறுப்புடமையும் காணப்படுகிறது?

A. ஒரு கட்சி முறை

B. இரு கட்சி முறை

C. பல கட்சி முறை

D. எதுவும் இல்லை

விளக்கம்: A. ஒரு கட்சி முறை

ஒரு கட்சி ஆட்சி முறையில் ஒரே ஒரு அரசியல் கட்சி மட்டுமே அரசாங்கத்தை அமைகிறது. எடுத்துக்காட்டாக சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி, வியட்னாமின் கம்யூனிஸ்ட் கட்சி, கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சி.

28) பொருத்துக.

a. ஷிரோமணி அகாலி தல் – 1. அஸ்ஸாம்

b. சமாஜ்வாடி கட்சி – 2. பீகார்

c. ராஷ்ட்ரிய ஜனதா தல் – 3. உத்திர பிரதேஷ்

d. அசோ கானா பரிஷித் – 4. பஞ்சாப்

A. 2 1 3 4

B. 1 2 4 3

C. 3 4 2 1

D. 4 3 2 1

விளக்கம்: D. 4 3 2 1

மேலும் தெலுங்கு தேசம் கட்சி - ஆந்திர பிரதேசம், திரிணாமுல் காங்கிரஸ் - மேற்கு வங்காளம், சிவசேனா – மகாராஷ்டிரம், அதிமுக மற்றும் திமுக - தமிழ்நாடு ஆகியவை முக்கியமான பிராந்திய கட்சிகள் ஆகும்.

29) மகப்பேறு மற்றும் குழந்தை நலப்பணிகள் திட்டம் எத்தனை வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு வழங்கப்படுகிறது.

A. 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 15 லிருந்து 45 வயது பெண்கள்

B. 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 13 இல் இருந்து 45 வயது பெண்கள்

C. 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 15 லிருந்து 50 வயது பெண்கள்

D. 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 15 லிருந்து 60 வயது பெண்கள்

விளக்கம்: A. 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் 15 லிருந்து 45 வயது பெண்கள்

இத்திட்டம் கருவுற்ற தாய்மார்கள் பரிசோதித்தல், தடுப்பூசி போடுதல், பேறுகால பராமரிப்பும் மற்றும் பேறுகால பின் பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகளையும் கருவுற்ற மற்றும் தாய்ப்பால் ஊட்டும் தாய்மார்களுக்கு நோய் தடுப்பூசி, மருத்துவ பாதுகாப்பு மற்றும் சத்தான உணவு அளித்தல் போன்றவற்றை உள்ளடக்கியது.

30) பள்ளி மாணவர் நலத்திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு எது?

A. 1964
B. 1969
C. 1972
D. 1976

விளக்கம்: A. 1964

இத்திட்டம் பாலர்களும் பள்ளி செல்லும் குழந்தைகளும் நோய் வரா வண்ணம் பாதுகாத்து, சுகாதார வசதிகளை அளித்து, பிறப்பு இறப்பு விகிதத்தை குறைக்க செயல்பட்டு வருகிறது.

31) "மனிதன் முழுமையான சுதந்திரம் கொண்டவன் ஆனால் அவன் ஒழுக்கக்கேடானவன்" என்று மனிதனின் இயல்பு பற்றி கூறியவர் யார்?

A. ஹாப்ஸ்

B. லாக்

C. ரூஸோ

D. அரிஸ்டாட்டில்

விளக்கம்: C. ரூஸோ

மேலும் இயற்கையின் நிலையில் பாதுகாப்பு மற்றும் அறநெறி கிடையாது என்றும் சமூக ஒப்பந்தம் பொது விருப்பத்தின் வழி நடத்தப்படும் என்றும் அரசு பற்றி கூறியுள்ளார்.

32) 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரப்பட்டியல் எத்தனை மொழிகளில் தயாரிக்கப்பட்டது?

A. 12
B. 14
C. 15
D. 16

விளக்கம்: D. 16

மேலும் பயிற்சி கையேடு 18 மொழிகளில் தயாரிக்கப்பட்டது. 1872 ஆம் ஆண்டு தொடங்கி தற்போது 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு 15வது மக்கள் தொகை புள்ளிவிபர கணக்கெடுப்பு ஆகும்.

33) இந்திய அளவில் பொருளாதாரத்தில் தமிழ்நாடு எந்த இடத்தில் உள்ளது?

A. 3
B. 4
C. 5
D. 8

விளக்கம்: A. 3

பரப்பளவின் அடிப்படையில் தமிழ்நாடு 11வது பெரிய மாநிலமாகும். மேலும் மக்கள் தொகை அடிப்படையில் ஆறாவது பெரிய மாநிலமாகும்.

34) தமிழ்நாடு உள்நாட்டு உற்பத்தி பங்களிப்பில் _____ இடத்தில் உள்ளது.

A. 2
B. 3
C. 4
D. 6

விளக்கம்: A. 2

மேலும் தலா வருமான முதலீடு, நேரடி அன்னிய முதலீடு மற்றும் தொழிற்சாலை உற்பத்தி ஆகியவற்றில் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

35) சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு எத்தனையாவது இடம் வகிக்கிறது?

A. 2
B. 3
C. 4
D. 5

விளக்கம்: B. 3

இந்த குறியீட்டை நிதிஆயோக் வெளியிடுகிறது. மேலும் மனித வளர்ச்சிக் குறியீட்டில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. மிக அதிக எண்ணிக்கையிலான பொறியியல் கல்லூரிகள் தமிழகத்தில் உள்ளன.

36) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டு திட்டங்களில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?

A. கர்நாடகா

B. மகாராஷ்டிரா

C. தமிழ்நாடு

D. குஜராத்

விளக்கம்: C. தமிழ்நாடு

மேலும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் 17 சதவீத பங்களிப்புடன் முதலிடம் வகிக்கிறது. தொழில் துறையில் உள்ள வேலைவாய்ப்பில் 16 சதவீத பங்களிப்பு உள்ளது.

37) தமிழகத்தில் பச்சிளங் குழந்தைகளின் இறப்பு வீதம் எவ்வளவு?

A. 8

B. 10

C. 12

D. 14

விளக்கம்: D. 14

இது பிற மாநிலங்களை காட்டிலும் மிகக்குறைவு. மேலும் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு வீதம் 2014இல் 21 ஆகவும், 2015ல் 20 ஆகவும் குறைந்துள்ளது.

38) தமிழகத்தில் எந்த முறை பாசனம் அதிக அளவில் காணப்படுகிறது?

A. ஏரிப்பாசனம்

B. ஆற்றுப் பாசனம்

C. கடல் நீர் பாசனம்

D. கிணற்று பாசனம்

விளக்கம்: D. கிணற்று பாசனம்

தமிழகத்தில் 56 சதவீத பாசனம் கிணற்று பாசன முறையில் மேற்கொள்ளப்படுகிறது. தமிழகத்தில் 17 ஆறுகள் காணப்படுகிறது. மேலும் என்பது அணைக்கட்டுகளும் உள்ளது.

39) மாலிப்டினம் எனும் ரசாயன தாது காணப்படும் இடம் _____.

A. மதுரை

B. சேலம்

C. தஞ்சாவூர்

D. திருச்செங்கோடு

விளக்கம்: A. மதுரை

இந்தியாவிலேயே மதுரை மாவட்டத்திலுள்ள கரடிக்குட்டம் எனும் ஊரில் மட்டுமே மாலிப்டினம் எனும் இரசாயன தாது கிடைக்கிறது.

40) கீழ்க்கண்டவற்றில் சரியாகப் பொருந்தி உள்ளதை தேர்ந்தெடு.

1) மாங்கனீசு சுரங்கம் – சேலம்

2) பாக்சைட் சுரங்கம் – ஏற்காடு

3) இரும்புத்தாது சுரங்கம் – கஞ்சமலை

A. 1 & 2
B. 2 & 3
C. 1 & 3
D. அனைத்தும்

விளக்கம்: D. அனைத்தும்

41) கீழ்கண்டவற்றுள் தமிழகத்தில் காணப்படும் கனிமங்களின் அளவுகளை ஏறுவரிசையில் எழுதுக?

1) கிராபைட் 2) வேர்மிகுலைட் 3) மோனசைட் 4) லிக்னைட்

A. 2-1-4-3
B. 3-1-2-4
C. 4-2-3-1
D. 1-2-4-3

விளக்கம்: B. 3-1-2-4

கிராபைட் 33 சதவீதமும், லிக்னைட் 87 சதவீதமும், வேர்மிகுலைட் 66 சதவீதமும், மோனோசைட் 25 சதவீதமும் தமிழகத்தில் கிடைக்கப்பெறுகிறது.

42) இந்திய அளவில் தமிழகத்தில் உள்ள கார்னெட் தனிமத்தின் வீதம் எவ்வளவு?

A. 33%
B. 38%
C. 42%
D. 48%

விளக்கம்: C. 42%

மேலும் ஜோர்கான் 38 சதவீதமும், லெமனேட் 28 சதவீதமும், ரூட்டைல் 27 சதவீதமும், மேக்னசைட் 17 சதவீதமும் காணப்படுகிறது.

43) 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் மக்கள் தொகை அடர்த்தி எவ்வளவு?

A. 480
B. 520
C. 555
D. 570

விளக்கம்: C. 555

இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12வது இடத்தில் உள்ளது. மக்கள் தொகை அடர்த்தியில் தேசிய சராசரி 382 ஆகும்.

44) கீழ்கண்ட மாநிலங்களில் அதிக தனிநபர் வருமானத்தை கொண்டுள்ள மாநிலம் எது?

A. தமிழ்நாடு

B. கேரளா

C. கர்நாடகா

D. ஆந்திர பிரதேசம்

விளக்கம்: A. தமிழ்நாடு

தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் 2200 டாலர் ஆகும். இது இந்திய சராசரியை விட 1.75 மடங்கு அதிகமாக உள்ளது.

45) தமிழகத்தில் எத்தனை வேளாண் காலநிலை மண்டலம் உள்ளது?

A. 5
B. 7
C. 8
D. 11

விளக்கம்: B. 7

தமிழகம் இந்திய அளவில் உதிரிப்பூக்கள் மற்றும் பழங்கள் உற்பத்தியில் மூன்றாம் இடத்தில் உள்ளது. தமிழகத்தில் வேளாண்மையானது மிக அதிக அளவில் ஆற்று நீர் மற்றும் பருவ மழையை நம்பி உள்ளது.

46) இந்தியாவில் தேங்காய் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மாநிலம் எது?

A. கோவா

B. கேரளா

C. தமிழ்நாடு

D. குஜராத்

விளக்கம்: C. தமிழ்நாடு

மேலும் ரப்பர் உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும், மிளகு உற்பத்தியில் மூன்றாம் இடத்திலும், கரும்பு உற்பத்தியில் நான்காம் இடத்திலும் உள்ளது.

47) இந்தியாவில் நெல் உற்பத்தியில் முதல் இடத்தில் உள்ள மாநிலம் எது?

A. ஆந்திர பிரதேசம்

B. குஜராத்

C. மத்திய பிரதேசம்

D. மேற்கு வங்காளம்

விளக்கம்: D. மேற்கு வங்காளம்

நெல் உற்பத்தியில் தமிழகம் இரண்டாம் இடத்தில் உள்ளது. தமிழகத்தில் உணவுப் பயிர்களில் நெல் முக்கிய பங்கு வகிக்கிறது.

48) தமிழகத்தில் பேருந்து கட்டுமானத் தொழிலுக்கு பெயர் பெற்ற இடம் எது?

A. கோவை

B. சென்னை

C. கரூர்

D. ஈரோடு

விளக்கம்: C. கரூர்

தென்னிந்திய பேருந்து கட்டுமான தொழிலுக்கான பங்களிப்பில் கரூர் 80 சதவீத பங்களிப்பை தருகிறது. மேலும் கரூரில் உள்ள தமிழ்நாடு காகித உற்பத்தி நிறுவனம் ஆசியாவிலேயே மிகப்பெரிய சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத காகித நிறுவனம் ஆகும்.

49) கீழ்கண்டவற்றுள் எஃகு நகரம் என்று அழைக்கப்படுவது எது?

A. கோவை

B. சங்ககிரி

C. சேலம்

D. நாமக்கல்

விளக்கம்: C. சேலம்

மேலும் இங்கு பல பெரிய ஜவ்வரிசி தயாரிப்பு நிறுவனங்களும், கனிம செல்வங்களும் உள்ளன. மேலும் விசைத்தறி, கைத்தறி, ஜவுளி மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் பெயர் பெற்றதாக உள்ளது.

50) தமிழகத்தின் நுழைவாயில் என்று அழைக்கப்படுவது எது?

A. சென்னை

B. கோவை

C. மதுரை

D. தூத்துக்குடி

விளக்கம்: D. தூத்துக்குடி

இதை சென்னைக்கு அடுத்தபடியாக வேதிப் பொருட்கள் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. மேலும் தூத்துக்குடி துறைமுகம் பழங்காலத்திலிருந்தே பெயர் பெற்ற ஒன்றாகும்.

51) இந்தியாவின் மொத்த தீப்பெட்டி உற்பத்தியில் _____ பங்கு சிவகாசியில் உற்பத்தியாகிறது.

A. 90%

B. 80%

C. 85%

D. 75%

விளக்கம்: A. 90%

மேலும் சிவகாசி அச்சுத் தொழில், பட்டாசு நிறுவனங்கள் போன்றவற்றில் முன்னோடியாக உள்ளது.

52) இந்தியாவின் நூல் கிண்ணம் என்று அழைக்கப்படுவது எது?

A. சூரத்

B. தமிழ்நாடு

C. மத்திய பிரதேசம்

D. மகாராஷ்டிரா

விளக்கம்: B. தமிழ்நாடு

இந்திய அளவில் மொத்த உற்பத்தியில் 41 சதவீதம் நூல் தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவின் பொருளாதாரத்தில் ஜவுளித்துறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

53) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஜவுளித் துறையின் பங்களிப்பு எவ்வளவு?

A. 2%
B. 2.5%
C. 4%
D. 5.5%

விளக்கம்: C. 4%

மேலும் மொத்த ஏற்றுமதி வருவாயில் 35 சதவீதம் ஜவுளித் துறையில் இருந்து கிடைக்கிறது. உற்பத்தித் துறையில் 14 சதவீதம் பங்களிப்பு ஜவுளி துறை மூலமாக கிடைக்கப்பெறுகிறது. ஜவுளித்துறை 35 மில்லியன் மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்குகிறது.

54) பன்னாட்டு தோல் பொருட்கள் கண்காட்சி எத்தனை ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறுகிறது?

A. 1
B. 2
C. 3
D. 5

விளக்கம்: A. 1

இந்தியாவில் தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 30 சதவீதமும் தோல் பொருட்கள் தயாரிப்பில் 70 சதவீதமும் தமிழகம் கொண்டுள்ளது. நூற்றுக்கணக்கான தோல் பொருட்கள் மற்றும் பதனிடும் தொழிற்சாலைகள் வேலூர், திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் அமைந்துள்ளன.

55) தெற்காசியாவின் மின்னணு சாதனங்கள் உற்பத்தி மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நகரம் எது?

A. ஆந்திர பிரதேஷ்

B. பெங்களூரு

C. சென்னை

D. ஹைதராபாத்

விளக்கம்: C. சென்னை

ஆசியாவின் டெட்ராய்ட் என்று அழைக்கப்படும் சென்னை மிகப்பெரிய அளவிலான வாகன உதிரி பாகங்கள் தயாரிப்புக்கான இடமாக விளங்குகிறது.

56) தமிழ்நாட்டில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது?

A. 12

B. 16

C. 18

D. 21

விளக்கம்: D. 21

இது இந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பெறுகிறது. 35 அலகுகளுடன் ஆந்திரா முதலிடத்தில் உள்ளது. சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

57) சிவகாசியை குட்டி ஜப்பான் என்று அழைத்தவர் யார்?

A. ஜவகர்லால் நேரு

B. லால் பகதூர் சாஸ்திரி

C. பெரியார்

D. ராஜாஜி

விளக்கம்: A. ஜவஹர்லால் நேரு

இந்திய பட்டாசு உற்பத்தியில் 80% சிவகாசியில் தயாரிக்கப்படுகிறது. இந்தியாவின் அச்சுத்துறை தீர்வுகளில் 60% சிவகாசியில் இருந்தே பெறப்படுகிறது.

58) காற்றமுத்த விசை குழாய் நகரம் என்று அழைக்கப்படுவது எது?

A. சென்னை

B. திருச்சி

C. கோவை

D. மதுரை

விளக்கம்: C. கோவை

இந்தியாவின் மோட்டார் மற்றும் பம்புகளுக்கான தேவையில் மூன்றில் இரண்டு பங்கினை கோவை மாநகரில் இருந்து பெறப்படுகிறது. மேலும் தங்க ஆபரணங்கள், மாவு அரைக்கும் இயந்திரம் மற்றும் வாகன உதிரிபாக ஏற்றுமதியில் முக்கிய பங்கினை வகிக்கிறது. மாவு அரைப்பான் இயந்திரத்திற்கான புவிசார் குறியீடு கோவை மாவட்டம் பெற்றுள்ளது.

59) நிறுவப்பட்ட திறன் அளவில் தென்னிந்தியாவில் முன்னணியில் உள்ள மாநிலம் எது?

A. கர்நாடகா

B. கேரளா

C. ஆந்திர பிரதேசம்

D. தமிழ்நாடு

விளக்கம்: D. தமிழ்நாடு

26,865 MW அளவுகளுடன் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. முப்பந்தல் காற்றாலை மையம் கிராம மக்களுக்கு தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க மின்சாரத்தை வழங்குகிறது. கோவை, பொள்ளாச்சி, தாராபுரம் மற்றும் உடுமலைப்பேட்டை போன்ற இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள காற்றாலைகள் தவிர நாகர்கோவில் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் புதிதாக காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இது இந்தியாவின் 2% மின் தேவைகளை நிறைவு செய்கிறது. இது இந்தியாவின் காற்றாலை உற்பத்தியில் பாதி அளவு ஆகும்.

60) இந்தியாவில் இணையதள பயன்பாட்டில் முதல் இடத்தில் உள்ள மாநிலம் எது?

A. ஆந்திர பிரதேசம்

B. மகாராஷ்டிரா

C. தமிழ்நாடு

D. கர்நாடகா

விளக்கம்: B. மகாராஷ்டிரா

இம்மாநிலத்தில் 29.47 மில்லியன் பயனாளர்கள் உள்ளனர். இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு 28.01 மில்லியன் பயனாளர்கள் உடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. மேலும் ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

61) தமிழ்நாட்டில் உள்ள தேசிய நெடுஞ்சாலைகளின் எண்ணிக்கை யாது?

A. 22

B. 24

C. 27

D. 28

விளக்கம்: D. 28

இவை 5036 கிலோ மீட்டர் தொலைவினை இணைகின்றன. தங்க நாற்கர திட்டத்தின் முனையமாக நமது மாநிலம் உள்ளது. சென்னையிலுள்ள கோயம்பேடு மற்றும் ஈரோடு பேருந்து நிலையங்கள் நம் மாநிலத்தில் உள்ள மிகப்பெரிய மற்றும் இரண்டாவது பெரிய பேருந்து நிலையங்கள் ஆகும். சாலைப் போக்குவரத்தில் தமிழ்நாடு நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் உள்ளது.

62) கீழ்க்கண்டவற்றுள் சர்வதேச விமான நிலையம் அல்லாதது எது?

A. சென்னை விமான நிலையம்

B. கோவை விமான நிலையம்

C. மதுரை விமான நிலையம்

D. தூத்துக்குடி விமான நிலையம்

விளக்கம்: D. தூத்துக்குடி விமான நிலையம்

தமிழகத்தில் 4 சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன. அவை சென்னை, கோவை, மதுரை மற்றும் திருச்சி விமான நிலையங்கள் ஆகும். மும்பை மற்றும் டெல்லிக்கு அடுத்தபடியாக இந்தியாவின் மூன்றாவது பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் வான்வழி போக்குவரத்து 18 சதவீதம் வளர்ச்சி அடைகிறது.

63) தமிழ்நாட்டில் சுற்றுலாத் துறையின் சராசரி ஆண்டு வளர்ச்சி வீதம் எவ்வளவு?

A. 14%

B. 16%

C. 17%

D. 19%

விளக்கம்: B. 16%

2013 ஆம் ஆண்டு கணக்குப்படி இந்திய மாநிலங்களில் 25 கோடி சுற்றுலா பயணிகளுடன் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. தமிழ்நாடு அரசு மேற்பார்வையில் இயங்கும் தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டு துறை தமிழ்நாட்டின் சுற்றுலா பகுதிகளை மேம்படுத்துகிறது.

64) தமிழ் நாட்டில் ஆயிரத்திற்கு எத்தனை பேர் வேலை இல்லாமல் உள்ளனர்?

A. 42

B. 45

C. 50

D. 53

விளக்கம்: A. 42

தேசிய அளவில் வேலைவாய்ப்பின்மை அளவின் சராசரி 50 ஆகும். இந்திய அளவில் தமிழ்நாடு வேலைவாய்ப்பின்மையில் இருபத்தி இரண்டாவது இடத்தில் உள்ளது. 1995 ஆம் ஆண்டிலிருந்து நமது மாநிலம் வறுமையில் நிலையான சரிவை சந்தித்து வருகிறது. சேவைத்துறை வளர்ச்சியின் விளைவாக 2005 க்கு பிறகு இந்தியாவின் மிக வேகமாக வளரும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது.

65) “அரசு என்பது ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில், சட்டத்திற்காக அமையப்பெறும் மக்கள் கூட்டமாகும்” என்று கூறியவர் யார்?

A. ஹாலண்ட்

B. உட்ரோ வில்சன்

C. அரிஸ்டாட்டில்

D. பர்கஸ்

விளக்கம்: B. உட்ரோ வில்சன்

ஹாலண்ட், அரிஸ்டாட்டில், பர்கஸ், சிட்ஜ்விக் மற்றும் லாஸ்கி போன்ற அறிஞர்கள் அரசு என்பதனை வெவ்வேறு கூற்றுகளில் விவரித்துள்ளனர்.

66) தத்துவ ஞானி பிளாட்டோ ஒரு லட்சிய அரசில் எத்தனை குடிமக்கள் வாழ்வது போதுமானது என்று கருதினார்?

A. 5000
B. 5040
C. 6000
D. 6040

விளக்கம்: B. 5040

அதாவது ஓர் அரசு தன்னிறைவு பெறுவதற்கு ஏற்ற வகையில் அதேநேரத்தில் திறம்பட ஆட்சி செய்வதற்கும் ஏற்ற வகையிலும் மக்கள் தொகை இருக்க வேண்டும் என்று கூறினார். மேலும் ரூஸோ என்பவர் ஓர் இலட்சிய அரசு என்பது 10000 மக்கள் தொகை உடையதாக இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

67) இறைமை என்பது அரசின் எத்தனைவது கூறு?

A. 1
B. 2
C. 3
D. 4

விளக்கம்: D. 4

இறைமை என்பது உயர்ந்த மற்றும் தலையாய அதிகாரமாகும். அரசின் இறைமை அதிகாரம், சட்டங்களின் வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது. சட்டம் சார்ந்த ஆணையுரிமை தலையாயது. இறைமை என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்டது. நவீன இறைமை கோட்பாட்டின் தந்தை பிரஞ்சு நாட்டைச் சார்ந்த ஜூன் போடீன் ஆவார்.

68) 1776 ஆம் ஆண்டு எந்த நாட்டில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக அரசமைப்பு அவசியமான ஒரு அடிப்படை ஆவணம் என உணரப்பட்டது?

A. ரஷ்யா
B. அமெரிக்கா
C. சீனா
D. தென் ஆப்பிரிக்கா

விளக்கம்: B. அமெரிக்கா

இந்த அரசியலமைப்பு மக்களாட்சியின் அஸ்திவாரம் என்று கருதப்படுகிறது. அரசமைப்பு இல்லாத அரசு ஒரு குழப்பமான ஆட்சியை அமைத்து விடும் என ஜெல்லிக் கூறுகிறார்.

69) தொழில்துறை மாவட்டம் என்ற கருத்தை கூறியவர் யார்?

A. ஆல்பிரட் மார்ஷல்
B. ஹாலண்ட்

C. லாஸ்கி

D. உட்ரோ வில்சன்

விளக்கம்: A. ஆல்பிரட் மார்ஷல்

இங்கிலாந்தில் உலோகம் மற்றும் நெசவு தொழிலில் ஈடுபட்ட சிறிய நிறுவனங்களின் செயல்பாடுகளில் தொகுப்பினை புரிந்துகொள்ள 1920 களில் புகழ்பெற்ற பொருளாதார அறிஞரான ஆல்பிரட் மார்ஷல் அவர்கள் முயற்சி செய்து கொண்டிருந்தார். அப்போது தொழில் தொகுப்பு அல்லது மாவட்டங்களில் நன்மைகளை முதன் முதலில் கண்டறிந்தார். 1980 களில் இத்தாலியில் சிறிய நிறுவனங்கள் வெற்றி பெற்ற பின்னர்தான் இவரது கருத்து பிரபலமாகியது.

70) தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று கோயம்புத்தூர் அழைக்கப்பட காரணம் என்ன?

A. கனரக வாகன தயாரிப்பின் காரணமாக

B. உதிரி பாகங்கள் தயாரிப்பின் காரணமாக

C. மாவு அரைக்கும் இயந்திரம் உற்பத்தியின் காரணமாக

D. பருத்தி நெசவு தொழில் வளர்ச்சியின் காரணமாக

விளக்கம்: D. பருத்தி நெசவு தொழில் வளர்ச்சியின் காரணமாக

71) கீழ்கண்டவற்றுள் தொழில்நுட்ப முதலீட்டுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி அல்லாதது எது?

A. ஓசூர்

B. கோவை

C. சென்னை

D. திருநெல்வேலி

விளக்கம்: C. சென்னை

வளர்ச்சியை அதிகப்படுத்தும் பொருட்டு சென்னை வட்டார பகுதிகளைத் தவிர, இரண்டடுக்கு நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஓசூர் மற்றும் சேலம் ஆகிய பகுதிகள் தகவல் தொழில்நுட்ப முதலீட்டிற்கான இடங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

72) தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்ற கழகம் நிறுவப்பட்ட ஆண்டு எது?

A. 1968
B. 1971
C. 1972
D. 1975

விளக்கம்: B. 1971

தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்ற கழகம் என்பது 1971இல் தொழில் முன்னேற்றத்திற்காக நிறுவப்பட்டு, தொழில் தோட்டங்களை அமைத்தது. தமிழ்நாடு மாநில சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் 1970 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

73) தவறாக பொருந்தியுள்ளது தேர்ந்தெடு.

1) தமிழ்நாடு சிறுதொழில் கழகம் - 1965

2) தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டு கழகம் – 1972

3) தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் – 1949

A. 1
B. 2
C. 3
D. எதுவும் இல்லை

விளக்கம்: B. 2

நம் மாநிலத்தின் தொழில் தோட்டங்களை நிறுவுவதற்கும் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்கும் அரசு நிறுவனம் தமிழ்நாடு தொழில் துறை மேம்பாட்டு கழகம் ஆகும். புதிய தொழில் பிரிவுகளை நிறுவுவதற்கும் தற்போதுள்ள தொழில் பிரிவுகளை பெருக்குவதற்கும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம் குறைந்த அளவிலான நிதி உதவியை செய்கிறது. தமிழ்நாடு சிறுதொழில் கழகம் சிறு நிறுவனங்களுக்காக நிறுவப்பட்ட முதல் தொழில் துறை நிறுவனம் ஆகும்.

74) சரியாக பொருந்தியுள்ள ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களை தேர்ந்தெடு.

1) நாங்குநேரி SEZ - பல்நோக்கு உற்பத்தி SEZ திருநெல்வேலி

2) எண்ணூர் SEZ - அனல் மின் திட்டம், வயலூர்

3) கோயம்புத்தூர் SEZ - தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள்

4) ஓசூர் SEZ – தானியங்கி, பொறியியல், மின்னணுவியல், விண்வெளி மற்றும் பாதுகாப்பு

A. 1, 2 & 3
B. 2, 3 & 4
C. 1, 3 & 4
D. அனைத்தும்

விளக்கம்: D. அனைத்தும்

மேலும் பெரம்பலூர் SEZ - பல்நோக்கு உற்பத்தி SEZ,

தானியங்கி நகரம் SEZ – தானியங்கிகள்/ தானியங்கி உதிரி பாகங்கள், திருவள்ளூர்

இந்தியா- சிங்கப்பூர் SEZ – IT/ITEs மின்னணு வன்பொருள், தளவாடங்கள் மற்றும் கிடங்குகள், திருவள்ளூர்

உயிரி மருந்துகள் SEZ - மருத்துவ ஆராய்ச்சி அமைப்பு, விஷ கட்டுப்பாட்டு மையம், மைய மீள் உருவாக்க மருத்துவம், மருத்துவ ஆராய்ச்சி

75) மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் நிறுவப்பட்ட ஆண்டுமெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் நிறுவப்பட்ட ஆண்டு ____

A. 1984

B. 1987

C. 1991

D. 1993

விளக்கம்: A. 1984

மெட்ராஸ் ஏற்றுமதி செயலாக்க மையம் சென்னையில் ஒரு சிறப்பு பொருளாதார மையமாகவும். மத்திய அரசு அமைத்த நாட்டின் 7 ஏற்றுமதி செயலாக்க மண்டலங்களில் இதுவும் ஒன்றாகும் இது அந்நிய நேரடி முதலீட்டை ஊக்குவிப்பதற்கும் அந்நிய செலாவணியை ஈட்டுவதற்கும், வட்டார பகுதிகளில் அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் நிறுவப்பட்டது.

76) ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட நாள் ______

A. ஜனவரி 1 2015

B. ஜனவரி 16 2015

C. ஜனவரி 1 2016

D. ஜனவரி 16 2016

விளக்கம்: D. ஜனவரி 16 2016

ஸ்டார்ட் அப் இந்தியா திட்டம் என்பது இந்திய அரசின் ஒரு முன்முயற்சி திட்டம் ஆகும். இதன் முதன்மையான நோக்கம் தொழில் தொடங்குவதற்கான தொடக்க முயற்சிகளை ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு உருவாக்குதல் மற்றும் வளங்களை உருவாக்குதல் ஆகும்.

77) ஸ்டாண்ட் அப் இந்தியா திட்டம் தொடங்கப்பட்ட நாள் _____

A. ஏப்ரல் 1 2015

B. ஏப்ரல் 5 2015

C. ஏப்ரல் 1 2016

D. ஏப்ரல் 5 2016

விளக்கம்: D. ஏப்ரல் 5 2016

இத்திட்டம் பச்சைப் புல்வெளி நிறுவனம் அமைப்பதற்காக குறைந்தபட்சம் 10 லட்சம், அதிகபட்சம் ஒரு கோடி வங்கி கடன் வழங்குகிறது. பட்டியல் சாதியினர் அல்லது பட்டியல் பழங்குடியினர் மற்றும் ஒரு வங்கிக் கிளைக்கு ஒரு பெண் கடன் பெறுபவர் என வங்கி கடன்களை எளிதாக்குகிறது.

78) தமிழ்நாடு கீழ்க்கண்ட எந்த நாட்டை விட அதிகமாக மக்கள் தொகை கொண்டுள்ளது?

1) இங்கிலாந்து 2) பிரான்ஸ் 3) இத்தாலி 4) ஸ்பெயின்

A. 1 & 2

B. 2 & 3

C. 3 & 4

D. அனைத்தும்

விளக்கம்: D. அனைத்தும்

தமிழ்நாடு 7.2 கோடி மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. இங்கிலாந்து 6.5 கோடி, பிரான்ஸ் 6.5 கோடி, இத்தாலி 5.9 கோடி, தென் ஆப்பிரிக்கா 5.6 கோடி, ஸ்பெயின் 4.7 கோடி மற்றும் இங்கிலாந்து 2.1 கோடி மக்கள் தொகையை கொண்டுள்ளது. இந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பால் வெளியிடப்பட்டது ஆகும்.

79) இன, மத, மொழி சிறுபான்மையினருக்கான ஐநா பிரகடனம் கொண்டுவரப்பட்ட ஆண்டு ____.

A. 1989
B. 1991
C. 1992
D. 1993

விளக்கம்: C. 1992

இப் பிரகடனத்தின் முக்கிய அம்சங்களாவன:

1) சிறுபான்மை மக்கள் தனிப்பட்ட முறையிலும் பொது வாழ்விலும் எந்த வகையான பாகுபாடும் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக தங்கள் பண்பாட்டை பின்பற்றவும், மதத்தை கடைபிடிக்கவும், பிரச்சாரம் செய்யவும், மொழியை பயன்படுத்தும் உரிமை பெற்றவர்கள் ஆவர்.

2) சிறுபான்மை மக்கள் தங்களுக்கான அமைப்புகளை உருவாக்கவும் பராமரிக்கவும் உரிமை உண்டு.

3) சிறுபான்மையினர் தங்கள் வரலாறு, மரபுகள், மொழி மற்றும் பண்பாடு பற்றிய அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒட்டுமொத்த சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதற்கும் உரிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்.

4) ஏற்கனவே உள்ள மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்திற்கு இந்தப் பிரகடனம் எந்த வகையிலும் ஊறு விளைவிப்பதாக அமையக்கூடாது.

80) கீழ்க்கண்டவற்றுள் சரியானதை தேர்ந்தெடு.

1) இந்திய அரசியலமைப்பு சட்டம் 1949: பிரிவு 15 (4) - சமூக மற்றும் கல்வியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் அல்லது பட்டியல் சாதி மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்கான சிறப்பு திட்டங்கள் உருவாக்குவதற்கு அரசமைப்புச் சட்ட விதி 29(2) தடையாக இருக்காது.

2) இந்திய அரசியலமைப்பு சட்டம் 1949: பிரிவு 16(4) - அரசுப்பணியில் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறுவது அனைத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு வழங்க மேற்கொள்ளப்படும் செயல்களுக்கு இவ்விதி தடையாக இருக்காது.

A. 1
B. 2
C. 1 & 2
D. எதுவும் இல்லை

விளக்கம்: C. 1 & 2

81) அமர்த்தியா சென் எழுதிய " பாலின பாகுபாட்டின் பல்வேறு முகங்கள் " என்ற தலைப்புடைய கட்டுரையில் எத்தனை விதமான பாகுபாடுகளை பட்டியலிடுகிறார்?

A. 5
B. 7
C. 9
D. 11

விளக்கம்: B. 7

அவை இறப்பில் பாகுபாடு, பிறப்பில் பாகுபாடு, அடிப்படை வசதிகளில் பாகுபாடு, சிறப்பு வாய்ப்புகளில் பாகுபாடு, தொழிலில் பாகுபாடு, உடைமை கொள்வதில் பாகுபாடு மற்றும் இல்லத்தில் பாகுபாடு ஆகியவை ஆகும்.

82) நேர்மையான நீதி என்ற நூலை எழுதியவர் யார்?

A. ஜான் ரால்ஸ்

B. உட்ரோ வில்சன்

C. ஹாலண்ட்

D. அமர்த்தியா சென்

விளக்கம்: A. ஜான் ரால்ஸ்

இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த சிந்தனையாளர்களில் ஒருவராக ஜான் ரால்ஸ் கருதப்படுகிறார். நேர்மையான நீதி என்ற கருத்தியலின் அடிப்படையில் ஓர் நீதி கோட்பாட்டை அவர் உருவாக்கியுள்ளார். நீதி கோட்பாடு, அரசியல் தாராளவியல் மற்றும் மக்களின் சட்டம் ஆகியன இவரின் மற்றும் பிற படைப்புகள் ஆகும்.

83) நாட்டில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட பிரிவினர் இன் மேம்பாட்டிற்காக முதல் ஆணையம் அமைக்கப்பட்ட ஆண்டு எது?

A. 1947
B. 1953
C. 1963
D. 1979

விளக்கம்: B. 1953

இவ்வாலயம் காகா காலேல்கர் அவர்களின் தலைமையில் அமையப்பெற்றது. இதுவே சுதந்திர இந்தியாவின் முதல் பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் ஆகும்.

84) கீழ்கண்ட எந்த நாடு 1994ஆம் ஆண்டு மக்களாட்சிக்கு மாறியது?

A. நார்வே

B. ஸ்வீடன்

C. தென் ஆப்பிரிக்கா

D. டென்மார்க்

விளக்கம்: C. தென் ஆப்பிரிக்கா

இதைத்தொடர்ந்து முன்னர் நிலவிய இன ஒதுக்கல் ஆட்சியின் பாதிப்புகளை அகற்றி சமூகங்களிடையே சமத்துவம் ஏற்படும் வழிவகைகளை ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவாக உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

85) எந்த ஆண்டு இந்தியா முழுவதும் அரசின் நிர்வாக மொழியாக ஆங்கிலம் மட்டுமே பின்பற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது?

A. 1806

B. 1824

C. 1835

D. 1858

விளக்கம்: C. 1835

இங்கிலாந்து அரசின் நேரடி நிர்வாகம் விரிவடைந்தால் ஏற்பட்ட விளைவுகளில் இதுவும் ஒன்றாகும்.

86) 1892ல் செங்கல்பட்டிலிருந்து எந்த ஆட்சியரின் அறிக்கைப்படி நிலங்கள் பிரித்தளிக்கப்பட்டது?

A. பார்வெல்

B. பிரான்சிஸ்

C. மான்சன்

D. திரிமென்கீரே

விளக்கம்: D. திரிமென்கீரே

இவரது அறிக்கையின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 12 லட்சம் ஏக்கர் நிலம் பிரித்து வழங்கப்பட்டது. இதேபோல் தாழ்த்தப்பட்டோரின் குழந்தைகளுக்கான பள்ளிகளை அரசு உருவாக்கி அவற்றை பஞ்சமர் பள்ளிகள் என அழைத்தது.

87) பிராமணரல்லாதோர் அறிக்கை யாரால் வெளியிடப்பட்டது?

A. சர்.பி. தியாகராயர்

B. டி.எம். நாயர்

C. சி. நடேசன்

D. வெங்கடாசலம்

விளக்கம்: A. சர்.பி. தியாகராயர்

1913 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் கார்டியூ தலைமையிலான ராயல் ஆணையம் வந்தபோது அதனிடம் ஏராளமான விண்ணப்பங்கள் அளிக்கப்பட்டன. அவற்றில் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை மதத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் வேலைவாய்ப்புகளில் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

88) தென்னிந்திய சுதந்திர சங்கம் இயக்கத்தை தொடங்கியவர் யார்?

1) டி.எம். நாயர் 2) சர்.பி. தியாகராயர் 3) சி. நடேசன்

A. 1 & 2
B. 2 & 3
C. 1 & 3
D. அனைத்தும்

விளக்கம்: A. 1 & 2

1916 ஆம் ஆண்டு பிராமணரல்லாதோர் நலன் காக்க தொடங்கப்பட்டது. இவை இயக்கத்தின் சார்பில் ஜஸ்டிஸ் என்னும் இதழ் வெளியானது. இவ்வியக்கம் மக்களிடையே நீதிக்கட்சி என வழங்கப்பெற்றது. இவ்வியக்கம் பிராமண மக்கள் மத்தியில் கல்வி, வேலைவாய்ப்பு பெறுவதற்கான வகுப்புவாரி உரிமை குறித்த விழிப்புணர்வை உருவாக்கியது.

89) வகுப்புவாரி பிரதிநிதித்துவ அரசாணை வெளியிடப்பட்ட ஆண்டு?

A. 1921
B. 1929
C. 1935
D. 1942

விளக்கம்: A. 1921

சென்னை மாகாண சட்டமன்றத்தில் நீதிக்கட்சி ஆட்சியில் அமர்ந்ததைத்தொடர்ந்து நீதிக்கட்சி உறுப்பினர்கள் எழுப்பிய கோரிக்கைகள் மட்டுமல்லாமல் வகுப்புவாரி பிரதிநிதித்துவ மக்கள் ஆதரவு அதிகரித்ததால் அரசு அனுமதி அளித்து இவ்வாணை நிறைவேற்றப்பட்டது.

90) எங்கள் மக்களுக்கு வேலைகளில் சரியான பிரதிநிதித்துவம் தரப்படா விட்டால் நாங்கள் வரி கொடுக்க மாட்டோம் என்று கூறியவர் யார்?

A. சி. நடேசன்
B. முனுசாமி
C. ஆர்.கே.சண்முகம்
D. டி.எம்.நாயர்

விளக்கம்: A. சி. நடேசன்

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அனுமதி வழங்கப்படாததை கண்டித்து இவர் இவ்வாறு கூறினார்.

91) 1925 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அரசு கல்வி, வேலைவாய்ப்புகளில் பிரதிநிதித்துவம் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியவர் யார்?

A. ராஜாஜி
B. பெரியார்
C. சி. நடேசன்
D. இரா. முத்தையா

விளக்கம்: B. பெரியார்

இதற்கு காங்கிரஸ் தலைமை அனுமதி மறுத்ததை தொடர்ந்து அவர் காங்கிரஸிலிருந்து வெளியேறினார்.

92) கீழ்க்கண்ட யாருடைய தலைமையில் நீதிக்கட்சி செயல்பட்டபோது வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நிரந்தரமாக்கப்பட்டது?

A. பி. தியாகராயர்

B. டி.எம்.நாயர்

C. இரா. முத்தையா

D. முனுசாமி

விளக்கம்: C. இரா. முத்தையா

1928 ஆம் ஆண்டு இரா. முத்தையா தலைமையில் நீதிக்கட்சி செயல்பட்டபோது அரசின் எல்லாத் துறைகளிலும், பணி நியமனங்கள் முறைபடுத்தப்பட்டு அரசாணையின் மூலம் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் நிரந்தரமாக்கப்பட்டது.

93) பிற்படுத்தப்பட்டோருக்கான மண்டல் ஆணையத்தின் இட ஒதுக்கீடு எவ்வளவு?

A. 18%

B. 27%

C. 15%

D. 23%

விளக்கம்: B. 27%

வி.பி.சிங் ஆட்சியின்போது மண்டல் ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார். அதன் அடிப்படையில் மத்திய அரசின் வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்க மத்திய அரசு ஆணை பிறப்பித்தது.

94) தமிழ்நாட்டில் தற்போது உள்ள இட ஒதுக்கீடு வீதம் எவ்வளவு?

A. 52%

B. 60%

C. 65%

D. 69%

விளக்கம்: D. 69%

மு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பல்வேறு மாற்றங்களுக்கு பின் இறுதியாக 1989 ஆம் ஆண்டு பழங்குடியினருக்கு தனி இட ஒதுக்கீடு கோரி தொடரப்பட்ட வழக்கில் வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில்

1) பிற்படுத்தப்பட்டோருக்கு – 30%

2) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு – 20%

3) தாழ்த்தப்பட்டோருக்கு – 18%

4) பழங்குடியினருக்கு – 1%

என மொத்தம் 69% இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வந்தது.

95) தமிழ்நாட்டில் உள்ள 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்காக எந்த சட்டப் பிரிவை பயன்படுத்தி அன்றைய முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மசோதா ஒன்றை நிறைவேற்றினார்?

A. சட்டப்பிரிவு 31 ( C )

B. சட்டப்பிரிவு 32 ( C )

C. சட்டப்பிரிவு 31 ( B )

D. சட்டப்பிரிவு 32 ( B )

விளக்கம்: A. சட்டப்பிரிவு 31 ( C )

இட ஒதுக்கீடு 50 சதவீத வரையறையை மிகாமல் இருக்க வேண்டும் என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பினால் இம்மசோதா நிறைவேற்றப்பட்டது. பின் அன்றைய குடியரசுத் தலைவர் தனி சட்ட மசோதாவிற்கு ஒப்புதல் அளித்ததால் 69 சதவீத இட ஒதுக்கீடு உரிய சட்டப் பாதுகாப்பைப் பெற்றது.

96) தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டு சட்டம் இந்திய அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது?

A. IX

B. X

C. XI

D. XII

விளக்கம்: A. IX

நாடாளுமன்றத்தில் 1994 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 76 ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் இணைக்கப்பட்டது. அத்துடன் 1992 ஆம் ஆண்டு நவம்பர் 16ஆம் தேதி முதல் இச்சட்டம் முன்தேதியிட்டு நடைமுறைக்கு வந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

97) எந்த சட்டப் பிரிவு பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையம் அமைக்க குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் அளிக்கிறது?

A. சட்டப்பிரிவு 320

B. சட்டப்பிரிவு 325

C. சட்டப்பிரிவு 330

D. சட்டப்பிரிவு 340

விளக்கம்: D. சட்டப்பிரிவு 340

இதன்படி சமூக அடிப்படையிலும் கல்வி அடிப்படையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் எவை எவை என அடையாளம் காணவும் மற்றும் அவர்களின் நிலை குறித்து ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரைகளை வழங்கவும் குடியரசு தலைவருக்கு அதிகாரம் அளித்துள்ளது.

98) காகா கலேல்கர் தலைமையிலான பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தில் இருந்தவர்களின் எண்ணிக்கை _____.

A. 7
B. 11
C. 13
D. 15

விளக்கம்: B. 11

இதுவே நாட்டில் பிற்படுத்தப்பட்டோருக்கான முதல் ஆணையம் ஆகும். இக்குழுவின் அறிக்கையினை அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

99) மண்டல் தன் அறிக்கையின் முகப்புரையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு முன்னோடியாக இருப்பதாக எந்த மாநிலத்தை குறிப்பிடுகிறார்?

A. தமிழ்நாடு

B. கர்நாடகா

C. ஆந்திர பிரதேஷ்

D. குஜராத்

விளக்கம்: A. தமிழ்நாடு

மேலும் அம்மாநிலமே பிற்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் தமிழ்நாடு சமூக நீதியின் பிறப்பிடமாகவும் முகவரியாகவும் இருப்பதை அறியலாம்.

100) இப்போது அரசியல் என்ற சொல் " அரசாங்கங்களின் தற்கால பிரச்சினைகளைப் பற்றியது " எனக் கூறியவர் யார்?

A. கார்ல் மாக்ஸ்

B. டேவிட் ஈஸ்டன்

C. ஆடம் கில்கிரிஸ்ட்

D. ராபர்ட் மிச்செல்ஸ்

விளக்கம்: C. ஆடம் கில்கிறிஸ்ட்

ஒருவன் தனக்கு அரசியலில் ஆர்வம் உள்ளது என்று கூறுவான் எனில் அவன் அரசியல் பிரச்சினைகள், கட்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீதும் ஆர்வமாக இருக்கிறான் என்று பொருளாகும் எனவும் குறிப்பிடுகிறார். ஆனால் அரசியல் கல்வி என்பது தற்கால அரசியல் நிகழ்வுகளிலிருந்து வேறுபட்டதாகும் என்றும் குறிப்பிடுகிறார்.